AL/2026/25 C/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

නූතන ලෝක ඉතිහාසය II (I කොටස)
நவீன உலக வரலாறு II (பகுதி I)
Modern World History II (Part I)

**25 C** **T** **II**

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

நவீன உலக வரலாறு - கி.பி. **1500** முதல் கி.பி. **1989** வரை

சுட்டெண் : ..................................

**அறிவுறுத்தல்கள் :**

- ※ இவ்வினாத்தாள் **பகுதி I**, **பகுதி II** ஆகிய **இரண்டு** பகுதிகளைக் கொண்டது.
- ※ **பகுதி I** இல் **1 - 40** வரையான **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** **வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய** விடைகளை எழுதுக.
- ※ **பகுதி I** இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் **ஒரு** புள்ளி வீதம் உரித்தாகும்.
- ※ **இரண்டு** பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்.** விடைகளை எழுதி முடித்த பின்னர், **பகுதி I** இற்கான விடைத்தாள்களை **பகுதி II** இற்கான விடைத்தாள்களுடன் **இணைத்துக் கையளிக்குக.**

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| பக்க இல. | வினா இல. | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | 1 - 3 | |
| 2 | 4 - 15 | |
| 3 | 16 - 20 | |
| 4 | 21 - 25 | |
| 5 | 26 - 31 | |
| 6 | 32 - 40 | |
| மொத்தம் | | |

| | கையொப்பம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

## பகுதி I

- **1** தொடக்கம் **10** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** மட்டும் ஏதோவொரு காரணத்தினால் ஏனைய பெயர்களுடன் **பொருந்தாது** உள்ளது. அந்தப் **பொருந்தாத** பெயரை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

**1.** (1) ஒரு தெய்வக் கோட்பாடு (2) முதலாளித்துவம் (3) தாராளவாதம்
(4) சமூகவுடைமைவாதம் (5) அராஜகவாதம் (……)

**2.** (1) சுன்டா (2) ஹோர்மூஸ் (3) ஜிபிரோல்டர்
(4) மகலன் (5) பனாமா (……)

**3.** (1) ஜோன் வைகிளிவ் (2) ஜோன் ஹஸ் (3) இக்னேஷியஸ் லொயாலோ
(4) மார்ட்டின் லூதர் (5) ஜோன் கல்வின் (……)

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



4. (1) வீனஸின் பிறப்பு (2) இறுதி இராப் போசன விருந்து
(3) மொனாலிசா (4) மடமையின் புகழாரம்
(5) இறுதித் தீர்ப்பு (......)

5. (1) மொகலாயர் (2) சமுராய் (3) சிங்
(4) கொன்பவுங் (5) சக்ரி (......)

6. (1) பொஸ்ரன் (2) லெக்ஸிங்டன் (3) சரடோகா
(4) பிலடெல்பியா (5) கியூபெக் (......)

7. (1) ஜோன் கே (2) ஜேம்ஸ் ஹாவ்கிரீவ்ஸ் (3) ரிச்சரட் ஆர்க்ரைட்
(4) சார்ள்ஸ் டவுண்செண்ட் (5) சாமுவேல் குறொம்டன் (......)

8. (1) கலோன் (2) மிராபோ (3) அபே சியெஸ்
(4) லபாயட் (5) மராட் (......)

9. (1) இராஜேந்திர பிரசாத் (2) சர்வபள்ளி இராதாகிருஷ்ணன்
(3) லால்பகதூர் சாஸ்திரி (4) வெங்கட கிரி
(5) நீலம் சஞ்சீவரெட்டி (......)

10. (1) கேரளா (2) திருவனந்தபுரம் (3) இமயமலைப் பிரதேசம்
(4) தமிழ்நாடு (5) மேற்கு வங்காளம் (......)

- **11** தொடக்கம் **15** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிச் சொற்கள் வீதம்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

11. (1) நேபாளம் - இந்து சமயம்
(2) தாய்லாந்து - பௌத்தம்
(3) வியட்நாம் - தா ஓ வாதம்
(4) பிலிப்பைன்ஸ் - உரோமன் கத்தோலிக்கம்
(5) பங்களாதேஷ் - இஸ்லாம் (......)

12. (1) கிரம்ளின் - மொஸ்கோ
(2) சென் பீற்றர்ஸ் தேவாலயம் - உரோம்
(3) வெஸ்ற் மினிஸ்ரர் - லண்டன்
(4) வெள்ளை மாளிகை - வாஷிங்டன்
(5) சுதந்திர சிலை - பேர்ளின் (......)

13. (1) பொதுமக்கள் சபை - பிரித்தானியா
(2) டுமா - ரஷ்யா
(3) ரைஷ்டாக் - இத்தாலி
(4) தேசிய மக்கள் காங்கிரஸ் - மக்கள் சீனக் குடியரசு
(5) லோக்சபா - இந்தியா (......)

14. (1) ஜோன் லொக் - அரசாங்கம் பற்றிய இரண்டு கட்டுரைகள் (Two Treatises of Government)
(2) பரன் டி மொன்டெஸ்கியூ - சட்டத்தின் ஆன்மா (Spirit of the Laws)
(3) ஜீன் ஜக் ரூசோ - சமூக ஒப்பந்தம் (Social Contract)
(4) அடம் ஸ்மித் - நாடுகளின் செல்வம் (Wealth of Nation)
(5) ஜவஹர்லால் நேரு - வியத்தகு இந்தியா (The Wonder that was India) (......)

15. (1) இந்தோனேசியா - சுன் யாட் - சென்
(2) கியூபா - பிடல் கஸ்ரோ
(3) கொங்கோ - பற்றிஸ் லுமும்பா
(4) சைப்பிரஸ் - மகாரியொஸ்
(5) உகண்டா - மில்டன் ஒபோடே (......)

110

- **16** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகளின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடரொழுங்கில் **தரப்படவில்லை. Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தின் **இலக்கத்தைத்** தெரிவுசெய்து **அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

**16.**

| X | Y |
|---|---|
| (i) யூபிரடிஸ் ஆறு | A - பாகிஸ்தான் |
| (ii) நைல் நதி | B - ஈராக் |
| (iii) இந்து நதி | C - பிரேசில் |
| (iv) யாங்டிசி நதி | D - எகிப்து |
| (v) அமேசன் நதி | E - சீனா |

(1) A C B E D (2) B D A C E (3) B D A E C (4) E C D B A (5) E D A C B (……)

**17.**

| X | Y |
|---|---|
| (i) இருண்டகண்டம் | A - சீனா |
| (ii) புதிய உலகம் | B - துருக்கி |
| (iii) உறங்கும் இராட்சசன் | C - அமெரிக்கா |
| (iv) கிரீடத்தின் இரத்தினம் | D - ஆபிரிக்கா |
| (v) ஐரோப்பாவின் நோயாளி | E - இந்தியா |

(1) D A B E C (2) D C A E B (3) D C A B E (4) E C D A B (5) E D B C A (……)

**18.**

| X | Y |
|---|---|
| (i) XIV ஆம் லூயி | A - 'சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம்' |
| (ii) அமெரிக்கப் புரட்சி | B - 'புரட்சி என்பது நானே' |
| (iii) பிரான்சியப் புரட்சி | C - 'பிரதிநிதித்துவம் இல்லையேல் வரி இல்லை' |
| (iv) நெப்போலியன் போனபார்ட் | D - 'அமைதி, நிலம் உணவு' |
| (v) போல்ஷ்விக் புரட்சி | E - 'நானே அரசு' |

(1) C E A B D (2) D E A B C (3) D E B A C (4) E C A B D (5) E A C B D (……)

**19.**

| X | Y |
|---|---|
| (i) வெலஸ்லி பிரபு | A - வாரிசுரிமை பறிப்புக் கொள்கை (Doctrine of lapse) |
| (ii) பெண்டிங்க் பிரபு | B - துணைக் கூட்டணிக் கொள்கை |
| (iii) டல்ஹவுசி பிரபு | C - உடன்கட்டை ஏறுவதை தடைசெய்தல் |
| (iv) கனிங் பிரபு | D - வங்காளம் இரண்டாகுதல் |
| (v) கர்சன் பிரபு | E - இந்தியா பிரித்தானிய முடிக்குரிய குடியேற்ற நாடாகுதல் |

(1) A C E B D (2) B C A E D (3) B C A D E (4) D B E C A (5) D E A B C (……)

**20.**

| X | Y |
|---|---|
| (i) இந்திரா காந்தி | A - இஸ்ரேலின் முதல் பெண் பிரதமர் |
| (ii) கோல்டா மேயர் | B - பாகிஸ்தானின் முதல் பெண் பிரதமர் |
| (iii) இசபெல் பெரோன் | C - இந்தியாவின் முதல் பெண் பிரதமர் |
| (iv) மாக்கிரட் தச்சர் | D - ஆர்ஜன்டினாவில் முதல் பெண் ஜனாதிபதி |
| (v) பெனாசிர் பூட்டோ | E - பிரித்தானியாவின் முதல் பெண் பிரதமர் |

(1) C A D E B (2) C E A B D (3) D E B A C (4) E D A B C (5) E D A C B (……)

PAST PAPERS WIKI

[பக். 4 ஐப் பார்க்க

Past Papers Wiki



- **21** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது.** அதனைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக் குறியினுள்** எழுதுக.

**21. அமெரிக்கப் புரட்சி**

(1) பிரித்தானிய குடியேற்றவாத கொள்கைகளுக்கு எதிராக குடியேற்றவாசிகளிடையே நிலவிய வெறுப்பே முக்கிய காரணமானது.
(2) அமெரிக்கப் புரட்சிக்கான சிந்தனை தொடர்பில் வொல்டெயரின் கருத்துகள் தாக்கம் செலுத்தின.
(3) பொஸ்ரன் தேநீர் விருந்து தீர்மானமிக்க நிகழ்வாகும்.
(4) ஜோர்ஜ் வாஷிங்டனால் வழிநடத்தப்பட்டது.
(5) அமெரிக்கப் புரட்சி, பிரான்சிய புரட்சியின் தலைவர்களிடத்தில் தாக்கம் செலுத்தியது. (......)

**22. தொழில் புரட்சி**

(1) தொழில் புரட்சி, பிரித்தானிய பொருளாதாரத்தை கிராமிய பொருளாதாரத்திலிருந்து நகரப் பொருளாதாரமாக மாற்றியமைத்தது.
(2) தொழிற்சாலைமுறை முடிவுப்பொருள் உற்பத்தியை விருத்திசெய்தது.
(3) கைத்தொழில் புரட்சிக் காலத்தின் முக்கிய கண்டுபிடிப்பு அச்சிடும் இயந்திரம் ஆகும்.
(4) கைத்தொழில் புரட்சிக் காலத்தில் புடைவைக் கைத்தொழில் பெருமளவில் வளர்ச்சியடைந்தது.
(5) கைத்தொழில் புரட்சி பரந்த கைத்தொழில் நகரங்களின் வளர்ச்சிக்கு காரணமானது. (......)

**23. பிரான்சிய புரட்சி**

(1) XV ஆம் லூயி மன்னனின் ஆட்சிக் காலத்தில் தோற்றம் பெற்றது.
(2) எஸ்ரேட்ஸ் ஜெனரல் சபைக்கு அழைப்புவிடுத்தல்.
(3) டெனிஸ் மைதான சத்தியப் பிரமாணம்.
(4) பஸ்ரீலை உடைத்தல்.
(5) புர்பேர்ண் அரச வம்சம் விரட்டப்பட்டது. (......)

**24. இந்திய தேசிய போராட்டம்**

(1) 1857 இல் பிரித்தானியர் ஆட்சிக்கு எதிராக சிப்பாய் கலகம் ஏற்பட்டது.
(2) இந்திய தேசிய சங்கம் 1885 இல் தாபிக்கப்பட்டது.
(3) சிவில் சட்டம் மீறும் இயக்கம் ஜவஹர்லால் நேருவின் தலைமையின் கீழ் செயற்படுத்தப்பட்டது.
(4) 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் 1942 இல் ஆரம்பிக்கப்பட்டது.
(5) இந்தியா 1947 இல் சுதந்திரம் அடைந்தது. (......)

**25. பனிப்போர் காலத்தில் எழுந்த நெருக்கடிகள்**

(1) மொரோக்கோ நெருக்கடி
(2) பேர்ளின் அடைப்பு
(3) கொரிய யுத்தம்
(4) கியூபா ஏவுகணை நெருக்கடி
(5) வியட்னாம் போர் (......)

[பக். 5 ஐப் பார்க்க

- **26** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் **ஒன்று** அல்லது **பல** சரியான விடையாகும். சரியான விடை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

**(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரியாயின் ........................................ **1** எனவும்
**(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் ........................................ **2** எனவும்
**(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் ........................................ **3** எனவும்
**(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரியாயின் ........................................ **4** எனவும்
**வேறு விடைகளின்** எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் ......... **5** எனவும்
**அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரி | **(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரி | **வேறு விடைகளின்** எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரி |

**26.** மறுமலர்ச்சி தொடர்பில் பின்வரும் கூற்று/ கூற்றுகளில் எது/ எவை சரியானது/ சரியானவை?
(A) இத்தாலியில் ஆரம்பமானது.
(B) 1453 இல் துருக்கியர் கொன்ஸ்தாந்திநோப்பிளை கைப்பற்றுதல் மறுமலர்ச்சிக்கான காரணமாக கருதப்படுகிறது.
(C) மறுமலர்ச்சிக் காலத்தில் கோதிக்கலை விருத்தியடைந்தது.
(D) மறுமலர்ச்சி, சமய சீர்திருத்த இயக்கத்தின் பிரதிபலனாகும். (......)

**27.** சீயம் (தாய்லாந்து) தொடர்பாக பின்வரும் கூற்று/ கூற்றுகளில் எது/ எவை சரியானது/ சரியானவை?
(A) போர்த்துக்கேய (வைஸ்ரோய்) அல்போன்சோ த அல்பகர்க் 1511 இல் சீயத்தை ஆக்கிரமிப்புச் செய்தார்.
(B) நெகுயென் அரச வம்சத்தினால் சீயம் ஆட்சி செய்யப்பட்டது.
(C) சீயம் ஒருபோதும் குடியேற்ற ஆட்சிக்கு உட்படவில்லை.
(D) 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் சீயம் ஆட்சியாளர்கள் நவீனமயமாக்கல் கொள்கையை நடைமுறைப்படுத்தினர். (......)

**28.** இந்தோனேசியாவில் ஒல்லாந்தர் ஆட்சி தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் எது/ எவை சரியானது/ சரியானவை?
(A) ஒல்லாந்தர் 16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தோனேசியாவுக்கு வந்தனர்.
(B) 17 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தக கம்பனி இந்தோனேசியாவின் தீவுகளில் பெரும்பாலானவற்றின் ஆதிக்கத்தைக் கைப்பற்றியிருந்தது.
(C) ஒல்லாந்தர் தமது தலைமையகத்தை பத்தேவியாவில் அமைத்தனர்.
(D) பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் போர்த்துக்கேயர் ஒல்லாந்தரின் பிரதேசங்களை கைப்பற்றிக்கொண்டனர். (......)

**29.** சோவியத் யூனியன் தொடர்பாகப் பின்வரும் கூற்றுகளில் எது/ எவை சரியானது/ சரியானவை?
(A) 1917 புரட்சியின் பின்னர் சோவியத் யூனியன் கம்யூனிச அரசாக உருவாக்கப்பட்டது.
(B) வி. ஐ. லெனின் முதல் அரச தலைவர் ஆவார்.
(C) மேற்குலகுடன் 'சமாதான சகவாழ்வு' அவசியமென நிகிடா குருஷேவ் கூறினார்.
(D) மிகாயில் கொர்பச்சேவ் சோவியத் யூனியனின் இறுதித் தலைவர் ஆவார். (......)

**30.** இரண்டாம் உலகப் போர் தொடர்பாகப் பின்வரும் கூற்றுகளில் எது/ எவை சரியானது/ சரியானவை?
(A) ஹிட்லரினால் போலாந்து ஆக்கிரமிக்கப்படுதலே இரண்டாம் உலகப் போர் ஏற்படுவதற்கான உடனடிக் காரணமாகும்.
(B) போரின் ஆரம்பத்தில் பிரித்தானியா நடுநிலையாளராக இருப்பதற்கு முயற்சித்தது.
(C) இரண்டாம் உலகப் போர் அச்சு நாடுகளுக்கும் நட்பு நாடுகளுக்கும் இடையிலானது.
(D) இரண்டாம் உலகப் போரின் இறுதியில் வேர்சேல்ஸ் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டது. (......)

- **31** தொடக்கம் **35** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையைத் தெரிவுசெய்து **அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**31.** குருதிச் சுற்றோட்டத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
(1) ஜொகன்னஸ் கெப்லர் (2) ஐசக் நியூட்டன் (3) வில்லியம் ஹார்வே
(4) சார்ள்ஸ் டார்வின் (5) அல்பேர்ட் ஐஸ்ரின் (......)

[பக். 6 ஐப் பார்க்க

**32.** சாந்தி நிகேதனைத் தாபித்தவர் யார்?
(1) ராம் மோகன்ராய் (2) சுவாமி விவேகானந்தர் (3) தயானந்த சரஸ்வதி
(4) தேவேந்திரநாத் தாகூர் (5) கிருஷ்ணமெனன் (……)

**33.** 1911 இல் குடியரசு தாபிக்கப்பட்டதும் சீனாவின் சனாதிபதியாக நியமிக்கப்பட்டவர் யார்?
(1) காங் யு வெய் (2) யுவாங் ஷி காய் (3) சியாங் காய் ஷேக்
(4) செள என் லாய் (5) டென் ஷியாவோ - பிங் (……)

**34.** ஜப்பான் நிபந்தனைகளின்றி அமெரிக்க இராணுவத்திடம் சரணடைந்தபோது ஜப்பானுடைய சக்கரவர்த்தி யார்?
(1) அயாஹிதோ (2) ஓசாஹிதோ (3) ஹிரோஹிதோ
(4) முட்சுஹிதோ (5) யோஷிஹிதோ (……)

**35.** இந்தியாவின் கடைசி பிரித்தானிய வைஸ்ரோய் யார்?
(1) அம்ஹர்சட் பிரபு (2) மின்ரோ பிரபு (3) இர்வின் பிரபு
(4) வெவல் பிரபு (5) கெனத் மவுண்ட் பேட்டன் பிரபு (……)

● **36** தொடக்கம் **40** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும். **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியானதாக இருப்பதுடன் **முதலாவது** கூற்றை மேலும் விபரிக்கின்றது. |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | 'மனிதனதும் பிரஜைகளினதும் உரிமைகள் பற்றிய பிரகடனம் ஜீன் ஜக் ரூசோவின் ஆக்கமாகும்.' | பிரான்ஸ் புரட்சியின் போது XVI ஆம் லூயிக்கும் அவரது மனைவிக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. | (……) |
| **37.** | பிஸ்மார்க்கின் கொள்கையானது "இன்றுள்ள முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக்கொள்வது பேச்சுவார்த்தைகளிலோ பெரும்பாலோரின் வாக்குகளினாலோ அல்லாது இரத்தம் மற்றும் இரும்பினாலேயே ஆகும்." என்ற அவரது புகழ்மிக்க கூற்றினால் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | பிஸ்மார்க்கின் சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் இத்தாலி ஐக்கியப்படுத்தப்பட்டது. | (……) |
| **38.** | பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் அரைப் பகுதியில் பிரான்சியர்கள் தங்கள் குடியேற்ற சாம்ராச்சியத்தை இந்தோ - சீனாவில் தாபித்தனர். | இந்தோ-சீன யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த 1954 இன் ஜெனிவா மகாநாட்டின் விளைவாக வியட்னாம் வடக்கு மற்றும் தெற்கு என்று இரண்டு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. | (……) |
| **39.** | 1947 இல் அமெரிக்கர்களால் மேலைத்தேய பாராளுமன்ற சனநாயக முறையின் தரத்துக்கு அமைவான புதிய அரசியல் யாப்பொன்று ஜப்பானில் நடைமுறைப்படுத்தப்பட்டது. | 1947 அரசியலமைப்பினூடாக ஜப்பான் சக்கரவர்த்தியின் பதவி அரசியல் அமைப்பு முடியாட்சியாக மாற்றியமைக்கப்பட்டதுடன் இருசபைகள் கொண்ட டயற் சபைக்கு சட்டவாக்க அதிகாரம் ஒப்படைக்கப்பட்டதுடன் பிரதம மந்திரி தலைமையிலான மற்றும் டயற் சபைக்கு பொறுப்புக் கூறும் மந்திரி சபைக்கு நிறைவேற்று அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது. | (……) |
| **40.** | பிரஸ்னெவ் இன் கொள்கையானது பனிப்போரின் 'நெகிழ்வுக்குக்' காரணமானதென நம்பப்படுகிறது. | சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் வட அத்லாந்திக் ஒப்பந்த ஒழுங்கமைப்பு கலைக்கப்பட்டது. | (……) |

※※

[பக். 7 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

| | | | |
|---|---|---|---|
| නූතන ලෝක ඉතිහාසය<br>நவீன உலக வரலாறு<br>Modern World History | II<br>II<br>II | 25 C | T |

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. } 1

විභාග අංකය / சுட்டெண் / Index No. } ...............................



Past Papers Wiki



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

නූතන ලෝක ඉතිහාසය II (II කොටස)
நவீன உலக வரலாறு II (பகுதி II)
Modern World History II (Part II)

25 C | T | II

நவீன உலக வரலாறு - கி.பி. **1500** முதல் கி.பி. **1989** வரை

**அறிவுறுத்தல்கள் :**

- நான்கு வினாக்களுக்கு விடையளிக்கப்பட வேண்டும்.
- பகுதி **II** ஆனது **A, B, C** ஆகிய **மூன்று** பகுதிகளைக் கொண்டது.
- பகுதி **A** இன் வினா கட்டாயமானது.
- பகுதி **B, C** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவுசெய்து, **மேலும் மூன்று** வினாக்களுக்கு விடை எழுதுக.
(**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு உலகப் புறவுருவப்படம் பகுதி **I** உடன் வழங்கப்பட்டுள்ளது.)

## பகுதி A

**1.** உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தேசப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள **எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.**

| | | |
|---|---|---|
| (i) குவாங்கோ நதி | (ii) மலாக்கா நீரிணை | (iii) செங்கடல் |
| (iv) பிரேசில் | (v) நன்னம்பிக்கை முனை | (vi) பம்பாய் |
| (vii) வாஷிங்டன் | (viii) ஈரான் | (ix) வியட்னாம் |
| (x) லெனின்கிராட் | (xi) தாய்வான் | (xii) கியூபா |

(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு **01** புள்ளி வீதம்)

## பகுதி B

**2.** "பதினைந்தாம் மற்றும் பதினாறாம் நூற்றாண்டுகளில் நாடுகாண் பயணங்கள் ஐரோப்பாவில் மட்டுமன்றி உலகின் பல்வேறு பிரதேசங்களிலும் அரசியல் மற்றும் பொருளாதார துறைகளில் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தியது."

(i) பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் நாடுகாண் பயணங்களை ஆரம்பித்த ஐபீரிய நாடுகள் **இரண்டின்** பெயர் தருக. (02 புள்ளிகள்)

(ii) நாடுகாண் பயணங்களுக்கு அனுசரணை வழங்கிய ஐபீரிய நாடுகளின் ஆட்சியாளர்கள் **இருவரின்** பெயர் தருக. (02 புள்ளிகள்)

(iii) நாடுகாண் பயணங்களின் பிரதான நோக்கங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) ஐரோப்பாவிலும் உலகின் ஏனைய பிரதேசங்களிலும் நாடுகாண் பயணங்களின் தாக்கத்தைப் பரிசீலிக்குக. (08 புள்ளிகள்)

**3.** (i) 1688 - 1689 ஆங்கிலப் புரட்சியின் பின்னணியைப் பகுப்பாய்வு செய்க. (07 புள்ளிகள்)

(ii) அந்தப் புரட்சியின் முக்கியத்துவம் பற்றிக் கருத்துரைக்குக. (09 புள்ளிகள்)

**4.** முதலாம் உலகப்போர் ஏற்படுவதற்குக் காரணமான முக்கிய காரணிகளைக் கலந்துரையாடுக. (16 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

PAST PAPERS WIKI

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**5.** பின்வரும் தலைப்புகளில் ஏவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) மறுமலர்ச்சிக் காலத்தில் கலை

(ii) பிரான்ஸின் தேசிய அரசு வளர்ச்சி

(iii) கைத்தொழிற் புரட்சியின் விளைவுகள்

(iv) பிராங்க்பேர்ட் பாராளுமன்றம்

(08 × 2 = 16 புள்ளிகள்)

## பகுதி C

**6.** "துரித மாற்றங்களை ஏற்படுத்திய மெய்ஜி காலம் ஜப்பானை நவீன அரசாக மாற்றியது."

(i) மெய்ஜி காலத்திற்கு முன்னரான காலத்தின் பெயர் தருக. (01 புள்ளி)

(ii) மெய்ஜி காலத்திற்கு முன்னர் சக்கரவர்த்தியின் பெயரால் நாட்டை ஆட்சி செய்யும் பொறுப்பைக் கொண்டிருந்த அதிகாரியின் பெயர் தருக. (01 புள்ளி)

(iii) மெய்ஜி சீர்திருத்தம் என்பதால் கருதப்படுவது யாது என்பதை வரைவிலக்கணப்படுத்துக. (03 புள்ளிகள்)

(iv) மெய்ஜி காலத்தில் ஏற்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார மாற்றங்களை பகுப்பாய்வு செய்க. (11 புள்ளிகள்)

**7.** இரண்டாம் உலகப் போரின் குறுங்கால மற்றும் நெடுங்கால விளைவுகளை விமர்சன ரீதியாகப் பரிசீலிக்குக. (16 புள்ளிகள்)

**8.** (i) மக்கள் சீனக் குடியரசில் மா சே துங் இனால் பின்பற்றப்பட்ட அரசியல், பொருளாதார மற்றும் சமூக கொள்கைகளைப் பரிசீலிக்குக. (08 புள்ளிகள்)

(ii) இந்த கொள்கைகள் எவ்வளவுக்கு வெற்றியளித்தன என்பதை மதிப்பீடு செய்க. (08 புள்ளிகள்)

**9.** பின்வரும் தலைப்புகளில் ஏவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) இத்தாலியில் பாசிசம்

(ii) ஹோ சி மின்

(iii) இந்தோனேஷியாவில் தேசிய இயக்கம்

(iv) ஐக்கிய நாடுகள் சபை

(08 × 2 = 16 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library